1979 மார்ச் 9]

திருமயத்தைச் சுற்றுலா மையமாக்குதல்.

*வினா எண் 302— திரு. நா. சுந்தரராஜ் : மாண்புமிகு செய்தி அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா?

(அ) புதுக்கோட்டை மாவட்டம் திருமயத்தை சுற்றுலா மையமாக அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

(ஆ) அங்கு ஒரு சுற்றுலா விடுதி கட்டும் திட்டம் உண்டா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: (அ) மற்றும் (ஆ)—இல்லை.

[முற்பகல் 9-20.]

திரு. நா. சுந்தரராஜ் : புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள திருமயம் ஊர் சரித்திரப் புகழ் பெற்ற ஊர். அந்த ஊரைப் பற்றி நன்றாகத் தெரிந்திருக்கும் அமைச்சர் அவர்கள் இல்லை என்ற ஓரே வார்த்தையில் முடித்திருப்பது பெருத்த வேதனை யைத் தருகிறது. ஆகவே, தயவு செய்து மீண்டும் பரிசீலித்து அதை சுற்றுலாத் துறையில் எடுத்துக் கொண்டு அங்கே பல வசதிகளைச் செய்து கொடுத்தால் நிச்சயமாக இராமேஸ்வரத் திற்குச் செல்லக் கூடிய வட நாட்டுப் பயணிகள் அங்கு தங்கி அங்குள்ள சிறப்பு வாய்ந்த கோவில்களை தரிசனம் செய்ய வாய்ப்பிருக்கிறது. ஆகவே, அது குறித்து மீண்டும் பரிசீலனை செய்வார்கள் என்று நம்புகிறேன். அப்படி மீண்டும் பரிசீலனை செய்வார்களா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : சுற்றுலாத் தலங்க ளாக மாற்றுவது என்பது சில அடிப்படை விதிகளை வைத்து அந்த விதிகள் மீது சுற்றுலாத் தலங்கள் உருவாக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. அந்த வகையில் பல்வேறு வசதிகள் சுற்றுலாப் பயணிகள் வருகின்ற எண்ணிக்கை எல்லாவற்றையும் வைத்துத்தான் அத்திட்டங்களுக்கு முதல் உரிமை தரப்படுகிறது அந்த வகையில் திருமயம் இப்போது எடுத்துக் கொள்ளப்பட வில்லை என்ற கருத்தில்தான் இல்லை என்ற பதில் அளிக்கப்பட் டிருக்கிறது. என்றாலும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் விருப்பத்தையொட்டி, அவர்களுடைய ஆர்வத்தை உணர்ந்து திருமயம் போன்ற இடங்களையும் சுற்றுலாத் தலங்களாக ஆக்க வேண்டும் என்கிற எண்ணம் அரசாங்கத்தின் பரிசீலனை யில் இருக்கிறது என்பதை மாத்திரம் தெரிவித்துக் கொள்கிறேன்.

சேரன்மாதேவியில் நீதிமன்றங்கள்.

*வினா எண் 303— திரு. பி.எச். பாண்டியன் : மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப் பாரா—

சேரன்மாதேவி கோட்டாட்சி தலைமையிடத்தில் குற்ற வியல் நீதிமன்றமும், சப்—கோர்ட்டும் அமைக்கும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா ?

THE HON. THIRU K. NARAYANASWAMI : There is a proposal for the constitution of a District Munsif-*cum*-sub-divisional Magistrate, Judicial Magistrate 's Court at Seranmadevi; that proposal is under consideration of Government. But there is no proposal under the considerational of Government so far as constitution of a sub-court is concerned.

THIRU P. H. PANDIAN : May I submit to the Hon. Law Minister that before the separation of judic ary from the executive, the sub-divi sionalMagistrate was functioning at Seranmadeviand after the separation of judiciary from the executive, the court was shifted to Shencottah and the people are suffering to go to Shenkottah, distance of 60 kms. for first-class offences. This, may kindly be enquired into.

THE HON. THIRU K. NARAYANASWAMI : Government will seriously take into consideration all these favourable circumstances urged by the Hon. Member.

THIRU R. KRISHNAN : Is there any proposal to form a sub-court at Then kasi and also distr ct munsif court at Sankarankoil. If so when will they be started?

THE HON. THIRU K. NARAYANASWAMI : This does not arise from the ma n question.

திரு. யா. சை. மு. யூசுப் : 1947 ஆம் ஆண்டு அமைக்கப் பட்ட செட்டூர் கமிஷன் அறிக்கைப்படி நீதித்துறையையும் வருவாய் துறையையும் பிரிக்கிற நேரத்தில் 200 வழக்குகளுக்கு ஒரு எஸ். எம். கோர்ட் என்று பரிந்துரை செய்யப்பட்டது. அந்த அடிப்படையில்—நாங்குநேரி வட்டத்தில் உள்ள சேரன்மாதேவியில் எஸ். எம். கோர்ட்டில் 500 காலண்டர் கேஸ்களும் 200 சாதாரண கேஸ்களும் எடுக்கப்படுகின்றன. ஆகவே, மேற்கொண்டு அங்கே ஒரு சப்-மாஜிஸ்ட்ரேட் நியமிக்கப்படுவார்களா?

THE HON. THIRU. K. NARAYANASWAMI : I request the hon Member to put a seperate question.

மாணவர்களுக்கு என்.சி.சி. பயிற்சி.

*வினா எண் 304— திரு. எஸ். கணேசன் ; திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) எல்லா மாணவர்களுக்கும் கட்டாய என்.சி.சி. பயிற்சி தர அரசு உத்தேசித்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?